**Kanton Zürich**
**Bildungsdirektion**
**Volksschulamt**

tamilisch

**Elterngespräche in Kindergarten und 1. Klasse**

# Hintergrundinformationen Entwicklungsbereiche

Dieses Dokument ist eine Übersetzungshilfe zuhanden fremdsprachiger Eltern.

பாலர்வகுப்பு மற்றும் முதலாம் வகுப்பு பெற்றோருடனான கலந்துரையாடல்

# முன்னேற்றப்பகுதிகளின் பிற்புல தகவல்கள்

இது பிறமொழி பேசும் பெற்றோர்களுக்கான ஒரு மொழிபெயர்ப்பு உதவியாகும

பின்வரும் அறிக்கைகள் சூரிச் பாடத்திட்டம் 21 இலிருந்து எடுக்கப்பட்டவையாகும்

## உடல், ஆரோக்கியம், உடலசைவுத்திறன்

சிறுவர்கள் தமது உடலை மையமாக உணர்வதோடு அவர்களின் செயற்பாடுகளினூடாக உலகை கண்டுபிடிக்கின்றனர். பல்வேறுபட்ட உடலசைவுகள் அவர்களின் உடல் உள வளர்ச்சிக்கு துணைபுரிகின்றன.

அந்தப் பிள்ளை:

- சுறுசுறுப்பாக, வெவ்வேறு உடலசைவு வகைகளை முயற்சித்தும் பயிற்சி செய்தும் பார்க்கின்றது.
- உடலசைவுத்திறன் மற்றும் உடலசைவினை செம்மைப்படுத்துகின்றது.
- தனது ஒருங்கிணைப்புத் திறன்களை பயிற்சி செய்கின்றது.
- உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் உடல் மூலம் வெளிப்படுத்துகின்றது.
- உடல்ரீதியாக விடயங்களை உருவாக்கி முன்வைக்கக் கற்றுக்கொள்கின்றது.
- உடல் வலிமையையும் வரையறையையும் கையாள கற்றுக்கொள்கின்றது.
- எச்சரிக்கையுடன் செயற்பட கற்றுக்கொள்கின்றது.
- தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்த்துக்கொள்கின்றது.
- மற்றவர்களுடன் தனது உடல் செயல்திறனை அளவிட ஆரம்பிக்கின்றது.

## புலனுணர்வு

பிள்ளைகள் தங்களையும் தாம் வாழும் சூழலையும் அவர்களது பல்வேறு உணர்வுகளின் மூலம் தொடர்பு கொள்கிறார்கள். அவர்கள் தங்களை, தங்களது உடல்களை, சகமனிதர்களை, மற்றும் சுற்றுச் சூழலை பல்வேறு புலன்கள் மூலம் உணர்ந்து கொள்கிறார்கள். பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல் மற்றும் தொடுதல் போன்றன. இவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பிள்ளை:

- பொருட்கள், சூழ்நிலைகள் மற்றும் செயல்முறைகள் போன்ற புலனுணர்வு மூலம் தங்களை வெளி உலகத்துடன் பழக்கப்படுத்திக்கொள்கின்றது.
- தனது உடலை நேரம், இடம் மற்றும் சுற்றுச்சூழலுடனான தொடர்பு மூலம் உணர்கிறது
- உணர்ச்சிகள், உணர்வுகள், எண்ணங்கள், ஞாபகங்கள், கற்பனைகள் போன்றவற்றின் மூலம் தமது உள் உலகத்தை விருத்தி செய்கின்றது.
- சூழ்நிலைக்கேற்ற பொருத்தமான உணர்ச்சி வெளிப்பாட்டை அடையாளம் கண்டுகொள்கின்றது.
- புலணுணர்வை விபரிக்கவும் ஒப்பிடவும் கற்றுக் கொள்கின்றது.
- கவனம் செலுத்துவதுடன் கூர்ந்து அவதானிப்பதற்கும் பயிற்சி செய்கின்றது.
- அனுபவம் மூலம் பொருத்தமான சொல்வளத்தை வளர்த்துக்கொள்கின்றது.

## நேரம் சார்ந்த நோக்குநிலை

பிள்ளைகள் காலப்பகுதியை மதிப்பிடவும், நேரத்தைத் திட்டமிடவும், நேர மூல வளங்களை தேவைக்கேற்ப பயன்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும், ஏனெனில் நேர உணர்வு பிறக்கும் போது கூடவருவதில்லை, நேரமானது ஒரு சமூகக்கட்டமைப்பும் ஆகும். நேரத்தைக் கண்காணிப்பது ஒரு நீண்ட சிக்கலான செயற்பாடாகும். பிள்ளைகள் நேரத்தை பலவிதமான தூண்டுதல் மூலம் அறிந்துகொள்ளவும் மதிப்பிடவும் கற்றுக்கொள்கிறார்கள்.

அந்தப் பிள்ளை:

- நேரத்தை குறிப்பிடும் சொற்களை தெளிவுபடுத்துகின்றது (உதாரணமாக: நாளை அல்லது நேற்று முன்தினம்).
- வரிசைகள் மற்றும் பட்டியல்களை உருவாக்குகின்றது.
- வாரநாட்கள் மாதங்கள் போன்றவற்றை சொல்கின்றது.
- நிலையான மற்றும் மாறுபடுகின்ற நாட்கட்டமைப்பை பிரதிபலிக்கின்றது (ஒழுங்குமுறையாக).
- வருடத்தில் வருகின்ற முக்கியமான நாட்களை கொண்டாடுதல் (பிறந்தநாள் மற்றும் ஏனைய விசேட தினங்கள்).
- நேரம் தொடர்பான குறியீடுகளை வரைந்து குறித்துக்காட்டுதல் (கடிகாரம், மாதம்; நாட்காட்டி).
- செயல்களின் வரிசையினை சிந்திக்கின்றது, அவற்றை செயல்படுத்துகின்றது மற்றும் அவற்றை பிரதிபலிக்கின்றது.
- செயல்களினது காலஅளவினை மதிப்பிடுவதுடன் அதனை அளவிடுகின்றது.

## இடம் சார்ந்த நோக்குநிலை

பிள்ளைகள் அனுபவங்களினூடாக அருகிலும் தொலைவிலும் உள்ள சுற்றுப்புறங்களை பற்றி அறிந்து வைத்துக்கொள்ளும் திறனை உருவாக்குகிறார்கள். பிள்ளைகள் பல இடங்களில் கிடைக்கும் அனுபவங்கள் மூலம் அடிப்படை கணிப்பிடும் திறன்களைப் பெறுகின்றனர்.

அந்தப் பிள்ளை:

- தான் வாழும் இடத்தை ஆராய்கின்றது (வீட்டு வளாகம், பாடசாலை வளாகம், பாடசாலைக்கு செல்லும் பாதை).
- அறைகளினது பல்வேறு பயன்பாடுகளை அறிந்து கொள்கின்றது (உட்புறம், வெளிப்புறம்).
- இடம்சார்ந்த அடையாளங்கள், தொடர்புகள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை கண்டுகொள்கிறது.
- தனது வாழ்க்கைச்சூழலில் உள்ள இடங்களையும் கற்பனையில் உள்ள இடங்களையும் வரைந்து அதை விபரிக்கின்றது.
- இலகுவான இடங்களினது உருவமைப்புக்களை வாசித்து விளங்கிக்கொள்கின்றது (உதாரணமாக: திட்டங்கள், வரைபடங்கள், புகைப்படங்கள்).

## தொடர்புகள் மற்றும் சட்டங்கள்

பிள்ளைகளுக்கு உலகவிடயங்களில் இயற்கையாகவே ஒரு ஆர்வம் உண்டு.
அவர்கள் உயிருள்ள உயிரற்ற இயற்கை மற்றும் மனிதருடனான உறவுகள் பற்றி தமது சொந்த கருத்துக்களை சிறுவயதிலேயே வளர்த்துக்கொள்கிறார்கள். அவர்கள் இதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள், தங்கள் செயல்களைத் தாங்களே தொடங்கவும், தனித்தனியாகவும் ஒன்றாகவும் விளையாடுவதற்கும், ஆராய்வதற்கும், அவர்களின் அவதானிப்புக்களையும் அனுபவங்களையும் உரையாடலினூடாக பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அந்தப் பிள்ளை:

- தொடர்புகளையும் மற்றும் சட்டபூர்வமான காரணங்களையும் புரிந்து கொள்கின்றது
- அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் கருத்துக்களையும் எண்ணங்களையும் வளர்க்கின்றது
- அவர்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதுடன், அது ஏன்? அல்லது இது எதற்காக? போன்ற கேள்விகளால் தூண்டப்பட்டு அவற்றை மேலும் வளர்க்கின்றது,
- தனது உலகக்கண்ணோட்டத்தை வேறுபடுத்தி காண்கின்றது.

## கற்பனைவளம் மற்றும் ஆக்கத்திறன்

பிள்ளைகளில் ஆக்கத்திறன் செயற்பாடுகள் பெரும்பாலும் கட்டமைக்கப்படாதவையாகவும், பகுதியளவு தெரிந்து மற்றும் தன்னிச்சையானவையாகவும் இருக்கும். பிள்ளைகள் தங்கள் உள் மற்றும் வெளிப்புற உணர்வுகளை விளங்குவதன் மூலம் தங்களது கருத்துக்களையும் அறிவையும் கொண்டு சூழலுடன் தொடர்புபடுத்துவதனூடாக பதிலளிக்கின்றனர். ஒரு கற்பனை வளம் நிறைந்த பிள்ளை பலவிதமான மனப்படங்கள் புனைவாற்றல் போன்றவற்றைக்கொண்டுள்ளது. சுதந்திரம், ஆலோசனை, மற்றும் ஆதரவு போன்றன அவர்களின் ஆக்கபூர்வத்தன்மையை தூண்டுகின்றன. ஆக்கபூர்வ திறன்களை பின்வரும் விடயங்கள் மூலம் மேன்மையடைகின்றது, அதாவது

- சுதந்திரமாக விளையாடும்போது
- அனுபவித்த மற்றும் கற்பனையான விடயங்களை காட்சிப்படுத்தும் போது
- சுதந்திரமாகவும் சுறுசுறுப்பாகவும் சுற்றுச்சூழலை கையாளும் இடங்களில்
- உணரப்பட்ட விடயங்களை மறுபரிசீலனை செய்து மேலும் வளர்க்கும் போது
- அறிமுகமற்ற முன்னோக்குகள் மற்றும் பதில்கள் உருவாகும் போது

## கற்றலும் பிரதிபலிப்பும்

பிள்ளைகள் வளரும் போது தமது சொந்த கற்றல் வாய்ப்புகளை விரிவுபடுத்துகின்றனர்:
வெவ்வேறு விடயங்களில் ஈடுபடுகிறார்கள், கட்டளைகளையும் பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்கிறார்கள், ஆராய்தல், கண்டுபிடித்தல், பயிற்சி செய்தல், அவதானித்தல், ஒப்பிடுதல், ஒழுங்குபடுத்தல், பிறர் போல் நடித்தல், பாவித்தல், பரீட்சித்தல், ஊகித்தல் விளக்குதல் போன்றன. இவற்றில் பெரும்பாலானவை விளையாட்டுத்தனமான முறையில் நடைபெறுகின்றது, இவை முறையான கற்றல் வடிவங்கள் மூலமாக வழங்கப்படுகின்றது. முதற்கட்டத்தில் விசேடமாக கற்றலானது அவதானித்தல் பிறர்போல நடித்தல் மற்றும் செய்து காட்டுதல், பின்பற்றுதல் (மாதிரி கற்றல்) என்பன முக்கிய பங்கு வகிக்கின்றது. பிள்ளை-கள் பெரியவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள் மற்றும் ஒருவரோடு ஒருவரும் கற்றுக்கொள்கிறார்கள். பிரதிபலித்தலில், படங்கள், மொழிகள், குறியீடுகள், எண்ணங்கள் ஆகியவை, தெளிவுபடுத்தல், வகைப்படுத்தல் மற்றும் மேலோட்டமாக பார்த்தல் போன்றவற்றை அடைவதற்கு ஒன்றோடொன்று தொடர்புடையதாக உள்ளன.

அந்தப்பிள்ளை:

- இயல்பான, சமூக சடவடிக்கைகள் மற்றும் இலக்குகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கின்றது.
- புதியதை தெரிந்தவர்களுடன் ஒப்பிடுகின்றது.
- தனது செயற்பாடுகளையும் கற்றலையும் திட்டமிடுவதுடன் இலக்குகளை அடைவதில் கவனமும் செலுத்துகின்றது.
- ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை அல்லது அவதானித்ததை வரைவதன் மூலம் அல்லது மொழிமூலம் பதிவிடுகின்றது.
- கற்றல் உள்ளடக்கம் மற்றும் செயற்பாடுபற்றி பலவித குறிப்புக்களை விவாதிக்கின்றது.

## மொழியும் தொடர்பாடலும்

பிள்ளைகளுக்கு மொழியானது அவர்களது அனுபவங்களையும் உணர்வுகளையும் கண்டுபிடிப்புக்களையும் வார்த்தையாக வெளியுலகிற்கு கொண்டு செல்ல வழிவகுக்கின்றது. மொழியானது சிந்தனையை வளர்ப்பதிலும் சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்துதலிலும் சிக்கல்களைத் தீர்ப்பதிலும் முறைசார் திறன்கள் மற்றும் உத்திகளைப் பெறுவதிலும் பெரும்பங்குவகிக்கி-ன்றது. பிள்ளைகள் தங்களை வெளிப்படுத்த பரந்தளவிலான மொழி மற்றும் தொடர்பு சாதனங்களைப்பயன்படுத்துகின்றது.
அந்தப்பிள்ளை

- ஒரு பெரிய குழுவில் தம்மை வெளிப்படுத்த ஊக்குவிக்கப்கடுகின்றது.
- ஒப்பந்தங்கள், விளக்கங்கள் மற்றும் நியாயப்படுத்தல்கள், கதைகள், விபரிப்புகள், விளக்கக்காட்சிகள், அனுபவங்கள், வரலாறுகள் மற்றும் விளையாட்டு சூழல்கள் போன்றன பேசுவதற்கான பல்வேறு வாய்ப்புகளை உருவாக்குகின்றன.
- சொற்களஞ்சியத்தை மேம்படுத்துவதுடன் கருத்தினை வெளிப்படுத்தும் வகைகளையும் விரிவுபடுத்துகின்றது.
- ஏனைய வெளிப்பாட்டு வடிவங்களை இசை, வடிவமைப்பு மற்றும் அசைவு போன்றவற்றினூடாக கண்டுபிடிக்கின்றனர்.

## தன்னுரிமையும் சமூக நடவடிக்கையும்

முதற்கட்டத்தில் உள்ள பிள்ளைகள் உலகை பரீட்சித்து, முன்முயற்சி எடுப்பதன்மூலம், சுயாதீனமாக பணிகளை தீர்க்கும் பலத்தை வளர்த்து தங்கள் சுயமதிப்பீட்டை வேறுபடுத்தும் சுயாதீன நபர்களாக தம்மை உணர்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் தம்மை தமது வயதுடையவர்களுடன் பெரிய குழுவில் பொருந்துகின்ற அனுபவத்தை பெறுகின்றார்கள், வெவ்வேறு உறவுகளை அறிவார்கள் மற்றும் அவற்றை எவ்வாறு உருவாக்கலாம் என்பதையும் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் ஏனைய பிள்ளைகளின் நலன்களையும் விருப்பங்களையும் கருத்தில் கொள்ள கற்றுக்கொள்கிறார்கள். ஒத்துழைக்கிறார்கள், மோதல்களை மற்றவர்களினது ஆதரவுடனும் சுயாதீனமாகவும் தீர்க்கிறார்கள்.

அந்தப்பிள்ளை:

- தமது செயல்களிலும் திறன்களிலும் நம்பிக்கையை வளர்த்து அதை பொறுப்பேற்கின்றது.
- அவர்களின் செயல்களுக்கான பொறுப்பை வளர்த்துக்கொள்கின்றது.
- தமது சிந்தனைக்குள் மற்றவர்களின் கருத்தையும் சேர்க்க கற்றுக்கொள்கின்றது (முன்னோக்கு).
- சூழ்நிலையைப்பொறுத்து தனது தேவையை வலியுறுத்தவோ அல்லது விட்டுக்கொடுக்கவோ கற்றுக்கொள்கிறது.
- குறுகியகால விருப்பங்களை ஒத்திவைத்து நீண்டகால இலக்குகளை தொடருகின்றது.
- தனது சொந்த உணர்ச்சிகளை கட்டுப்படுத்த கற்றுக் கொள்கின்றது.
- விரக்தி சகிப்புத்தன்மையை விரிவாக்குகின்றது.